IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:21/2022

**DEP OF WITNESS:PW1**

| | |
|---|---|
| NAME:Kasthuri | RELIGION:Hindu |
| FATHER NAME:Athisivam | CASTE: |
| VILLAGE:Jangamoor | OCCUPATION: |
| TALUK:Pernambut | AGE:61 |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 23.08.2022

நான் இந்த வழக்கில் வாதி என்னுடைய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதை எனது தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொண்டு கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

வா.சா.ஆ.1 எனது கணவர் எம்.சி.ஆதிசிவம் என்பவரின் இறப்பு சான்றிதழ்
வா.சா.ஆ.2 1ம் வாதியின் ஆதார் கார்டு நகல்
வா.சா.ஆ.3 2ம் வாதியின் ஆதார் கார்டு நகல்
வா.சா.ஆ.4 3ம் வாதியின் ஆதார் கார்டு நகல்
வா.சா.ஆ.5 10.08.2021 1ம் பிரதிவாதியின் நிராகரிப்பு சான்றிதழின் நகல்

மேற்படி ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு தாவாபடி தீர்ப்பாக வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**1 மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு பெறறோர்கள் வைத்த பெயர் கஸ்தூரி தான். எனது பள்ளி மற்றும் பிறப்பு சான்றிதழிலில் கஸ்தூரி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நான் பள்ளிக்கே செல்லவில்லை என்னிடம் பிறப்பு சான்றிதழ் இல்லை. எனக்கு படிக்க தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது கணவரின் முதலி மனைவி பெயர் கஸ்தூரி தான். எங்களுக்கு குடியாத்தம் கருப்புலீஸ்வரர் ஆலயத்தில் 15.07.1983 திருமணம் நடைபெற்றது. எனது கணவரின் முதல் மனைவி கஸ்தூரி இறந்த பிறகு எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. கோவிலில் திருமணம் நடைபெற்றால் மணமகன் மணமகளின் பெயருடன் ரசீது தருவது வழக்கம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவரின் முதல் மனைவி கஸ்தூரியின் தகப்பனார் பெயர் செங்கல்வராயன். எனது அப்பா பெயர் கண்ணையன். எங்கள் திருமணத்திற்கு முன்பு பெற்றோருடன் வசித்த போது இருந்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு

1.கோவிந்தராஜ் 2.கோட்டீஸ்வரி என்று இரண்டு பிள்ளைகள். கோவிந்தராஜ் பேர்ணாம்பட் அரசு மருத்துவமனையில் பிறந்தார். தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. 1985ல் பிறந்தார். கோட்டீஸ்வரி பேர்ணாம்பட் அரசு மருத்துவமனையில் பிறந்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி நீலமேகத்தின் திருமண அழைப்பிதழில் எனது பெயர் வசந்தம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். அது வீட்டில் அழைக்கும் பெயர். அந்த ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.07.2021 அன்று 3ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கேட்டு விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். அந்த மனுவின் அடிப்படையில் ஆவணங்களை பரிசீலனை செய்து அக்கம் பக்கம் விசாரித்ததில் வசந்தம்மாள் என்று தெரியவந்ததால் கஸ்தூரி என்ற பெயரை வாரிசு சான்றிதழ் கொடுக்க இயலாது என்று நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் மற்றும் 2வது பிரதிவாதியின் தாயார் பெயர் கஸ்தூரி எனது பெயர் வசந்தம்மாள் அதனால் தான் என்னுடைய பிறப்பு சான்று திருமணத்திற்கு முன்பு பெற்றோர்கள் ஆவணம் பிள்ளைகள் கல்வி மற்றும் பிறப்பு சான்றிதழ் ஆவணம் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஆதார் கார்டில் கஸ்தூரி என்று தான் உள்ளது. அந்த ஆதார் கார்டில் கஸ்தூரி என்று தவறுதலாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் மற்றும் 2ம் பிரதிவாதியின் தாயார் பெயர் தான் கஸ்தூரி என்றாலும் அவர்கள் பெயரிலுள்ள சொத்துக்களையும் நன்மைகளையும் அடையவேண்டி பொய்யான ஆவணங்கள் மூலமாக இந்த நீதிமன்றத்தில் வழகடு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய தகுதியானது என்றால் சரியல்ல.

**<u>3 மற்றும் 4வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது பெயர் கஸ்தூரி என்றால் சரிதான். எனது கணவர் முதல் மனைவி பெயர் கஸ்தூரி தான். எனது கணவர் ஆதிசிவன் முதல் மனைவி கஸ்தூரி 1980ல் இறந்துவிட்டார். எனக்கும் ஆதிசிவன் என்பவருக்கும் 1983ல் திருமணம் நடைபெற்றது. 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதிகளுககு எங்கள் திருமணத்தின் போது சுமார் 6 அல்லது 7 வயது இருக்கும். எங்கள் திருமணத்திற்கு பிறகு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எங்களுடன் தான் வசித்து வந்தார்கள். எனது கணவரின் வாரிசு சான்றிதழ் கேட்டு 3ம் பிரதிவாதியிடம் மனு என்னால் தாக்கல் செய்யப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் என்னை அழைத்து விசாரணை செய்தார். அவரிடம் நான் 2வது மனைவி என்று கூறினேன். கிராம நிர்வாக அலுவலர் விசாரிக்கும் போது சரியான ஆவணங்களை கொடுக்காததால் எனது மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF